# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2074/2 - 2018 ජුනි මස 04 වැනි සඳුදා - 2018.06.04

*2074/2 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பிலக்கம்: MTR/LND/ACQUI/LI/3950.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/2/2014 HA/114.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கமுடைய காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 417 A, கடைவீதி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் கடேவீதிய கிராமத்தில் அமைந்துள்ளதும் மு. பி. பட இலக்கம் மாற 2730 இல் துண்டு இலக்கங்கள் 01, 02, 03 எனக் காட்டப்பட்டுள்ள மேற்குறித்த காணி மாத்தறை காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை அமைப்பதற்காக எடுத்துக் கொள்ள உத்தேசித்துள்ளது.

*01.* **துண்டு இல. 1**
காணியின் பெயர்: கொட்டம்பகஹுவத்த; காணியின் விபரம்: வீட்டுத் தோட்டம் நிரந்தர இரு மாடிக் கட்டிடத்தையும், நிரந்தரக் கட்டிடங்கள் இரண்டிணையும், நீர்த்தாங்கி ஒன்றினையும் மற்றும் மலசல கூடங்கள் இரண்டினையும் கொண்டது; உரிமை கோருவோர்: திரு. எச். எம். என். ஜயரத்ன, இலக்கம் 59, குமாரதாஸ மாவத்தை மாத்தறை; காணியின் விஸ்தீரணம்: 0.0838 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. 2**
காணியின் பெயர்: மைத்திரிகே வத்த அல்லது கந்துகொட்டம்; காணியின் விபரம்: திறந்த வெற்றுக் காணி; உரிமை கோருவோர்: திரு. எச். எம். என். ஜயரத்ன, இலக்கம் 59, குமாரதாஸ மாவத்தை மாத்தறை; காணியின் விஸ்தீரணம்: 0.0040 ஹெக்டயார்.

*03.* **துண்டு இல. 3**
காணியின் பெயர்: மைத்திரிகே வத்த அல்லது கந்துகொட்டம்; காணியின் விபரம்: சிமெந்தி கால்வாய்; உரிமை கோருவோர்: ஆரம்ப உரிமைகோருவோர் யார் எனத் தெரியாது; காணியின் விஸ்தீரணம்: 0.0007 ஹெக்டயார்.

எடுத்துக்கொள்ளப்பட விருக்கும் காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியகாரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி 10.30 மணிக்கு மாத்தறை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈட்டு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் தேதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டி. டி. கே. விக்ரமஆரச்சி,
பிரதேச செயலாளர்,
காணி கொள்வனவு உத்தியோகத்தர்,
மாத்தறை - கடவத்சத்தற.

பிரதேச செயலகம்,
மாத்தறை - கடவத்சத்தற,
2018, மே 31.

06-753


1 A - G 27800 - 17 (2018/ 06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.